



# பிள்ளைகள்: சமாதானத்தின் சரணாலயங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள்: சமாதானத்தின் சரணாலயங்கள்

# ஆக்கப் பணிக்கு ஓர் அழைப்பு

இலங்கையில் ஆயுதப்பிணக்கினால் பாதிப்புற்ற பிள்ளைகளின் உரிமைகளைப் பிரசாரஞ் செய்து முன்னேற்றுதலும் பேணுதலும்.

சுருக்கமான அறிக்கை. மே 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கப் பணிக்கு ஓர் அழைப்பு- ஆக்கியோர் யார்?

இந்தப் பத்திரம் பலரின் கூட்டுமுயற்சியின் விளைவாகும். இதிற் சம்பந்தப்பட்ட எல்லோரும் உங்களைப் போலவே இலங்கைச் சிறுவர், சிறுமியர் ஆயுதப்பிணக்கினால் படும் அவலங்களையிட்டுக் கவலைப்படுவோராவர்; அக்கறைகொள்வோராவர். இந்த *"ஆக்கப் பணிக்கு ஓர் அழைப்பினை"* உருவாக்குவதில் இதுவரை ஐந்து மாத காலம் கடந்துவிட்டது. கொழும்பிலும் வடக்கு கிழக்கில் பிணக்கினால் பாதிப்புற்ற பகுதிகள் உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளிலும் சுமார் 250 பேரது ஆலோசனை பெறப்பட்டது; இதற்கென 80இற்கும் கூடுதலான ஆலோசனைக் கூடங்கள் நடத்தப்பட்டன. இவர்களுள் அமைச்சர்கள், அரசியற் கட்சிகளின் தலைவர்கள், மத்திய மற்றும் உள்ளூர் மட்ட அரசாங்க அதிகாரிகள், நான்கு பிரதான சமயங்களினதும் குருமார்கள், சமூகத்தலைவர்கள், முன்னணிக் கல்விமான்கள், உள்நாட்டு மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகளைச் சேர்ந்தோர் ஆகியோர் அடங்கினர்.

14 முகவரகங்கள், மனிதநேய மற்றும் பிள்ளைகள் சம்பந்தப்பட்ட உயர் தொழில்களைச் சார்ந்த தனியாட்கள் ஆகியோரடங்கிய "நடுநிலைச் சந்திப்புக் குழு" ஒன்று இந்த அழைப்புக்கு வடிவம் கொடுப்பதில் வழிகாட்டியாக நின்றது.

இந்தக் குழுவில், முக்கியமான அரசாங்க மற்றும் ஐ.நா. முகவரகங்கள், இலங்கை மற்றும் சர்வதேச அரசசார்பற்ற அமைப்புகள், முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் பங்குபற்றினார்கள்.

இந்த முயற்சி இன்னமும் தொடர்ந்து நடைபெறுகிறது. இதன் நோக்கம், சமுதாயத்தின் எல்லா மட்டங்களிலும் பல்வேறு கருத்துடையவர்களையும் கலந்தாலோசித்து அவர்கள் அனைவரினதும் ஒப்புதலைப் பெறுதலேயாகும். மக்கள் ஏனைய பிரச்சனைகளையிட்டு பல்லேறு கருத்துக்களை கொண்டிருந்தபோதிலும் பிணக்கில் அவதியுறும் பிள்ளைகளின் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் எல்லோரும் ஒரு மனத்தினராய் இருக்கிறார்கள் என்பதே இது விடயத்தில் நாம் கண்டறிந்துள்ள உண்மை.

பிள்ளைகளும் ஆயுதப் பிணக்கும் தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகத்தின் சிறப்புப் பிரதிநிதியாகிய ஒலாரா ஒட்டுணு அவர்களின் இலங்கை விஜயத்தின்போது பகிரங்கமாக முன்வைக்கவென விசேடமாக ஆக்கப்பெற்ற *"ஆக்கப்பணிக்கு ஓர் அழைப்பு"* என்பதன் சுருக்கமே இந்தப் பத்திரமாகும். இதுபற்றிக் கலந்தாலோசிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதால் முழுமையான பத்திரம் இன்னமும் தயாரிப்பு நிலையிலேயே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள்: சமாதானத்தின் சரணாலயங்கள்

- ஆயுதப் பிணக்குகளின் கேடுகள் அல்லது தாக்கங்களிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு

- ஆயுதப் பிணக்குகளில் எந்தவகையிலும் தள்ளப்படாதிருக்கும் அல்லது பாவிக்கப் படாதிருக்கும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு.

- ஆயுதப் பிணக்கின் பாதகமான விளைவு களிலிருந்து தப்பிக்க உதவி பெறும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு.

## ஆக்கப்பணிக்கு ஓர் அழைப்பு

- ஆயுதப் பிணக்கினால் அவதியுறும் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் எமக்குள்ள கடமைகளை தனித்தனியாகவும் ஒருமித்தும் நிறைவேற்றுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்கள்.

ஆயுதப் பிணக்கினால் பிள்ளைகள் படும் அல்லல், அவதி என்பன தொடர்பாக அண்மையில் வெளியான ஐ.நா. அறிக்கை ஒன்றின் கடைசிப்பந்தி "பிள்ளைகளை சமாதானத்தின் சரணாலயங்கள் எனக் கொள்வோமாக" என்று தொடங்குகிறது. இந்த பத்திரம் அந்த அழைப்பின் பிரதிபலனாக அமைவதுடன் அந்தக்கருத்தினை கீழக்கண்டவாறு மேலும் வரையறை செய்கிறது.

- ஆயுதப் பிணக்குகளின் அவலங்களிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு.

- ஆயுதப் பிணக்குகளில் எந்தவகையிலும் தள்ளப்படாதிருக்கும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு.

- ஆயுதப் பிணக்கின் பாதக விளைவுகளிலிருந்து தப்பிக்க உதவிபெறும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு.

இலங்கையருக்கு இந்தக் கருத்து புதியதன்று. இளம்பிள்ளை வாத (போலியோ) நோய்க்கு எதிராக எல்லாப் பிள்ளைகளுக்கும் தடை மருந்தூட்டும் பொருட்டு ஆயுதப் பிணக்கு நிலவும் பிராந்தியங்களில் அமைதி காக்கும் நாள்கள் அனுட்டிக்கும் வழக்கமானது பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்களே என்பதை நிரூபிப்பதாய் உள்ளது.

இலங்கைப் பிள்ளைகளின் இன்றைய அவல நிலையிலும் எதிர்கால நல்வாழ்விலும் அக்கறையுள்ள நாம் அனைவரும் தனித்தனியாகவும் ஒன்றுசேர்ந்தும் மேற்கொள்ளவேண்டிய பலதரப்பட்ட பணிகளுக்கு மேற்படி கருத்தினை பரந்துபட்ட முறையில் செயற்படுத்துமாறு "*ஆக்கப் பணிக்கு ஓர் அழைப்பு*" என்னும் இந்தப் பத்திரம் உங்களுக்கு அழைப்பு விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணக்கில் பிள்ளைகள் படும் பாடுகள்

போர்களும் பிணக்குகளும் பிள்ளைகளின் ஒவ்வொரு உரிமைக்கும் பங்கமுண்டாக்குகின்றன. குடும்பத்தவர்களுடனும் சமுதாயத்தவர்களுடனும் கூடிவாழும் உரிமை, தனிச்சிறப்புடைய தம் ஆளுமையை விருத்தி செய்யும் உரிமை, சுகவாழ்வுக்கு உரிமை, கல்வி கற்கும் உரிமை, சில சமயங்களில் உயிர்வாழும் உரிமை கூட பிணக்கின் போது பறிக்கப்படுகின்றன. இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் தற்போது இடம்பெறும் ஆயுதப்பிணக்கினால் சுமார் 900,000 பிள்ளைகள் நேரடியாக அவதிப்படுகிறார்கள். அத்துடன் நாட்டின் ஏனைய பகுதிகளில் மில்லியன் கணக்கான பிள்ளைகள் மறைமுகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். 380,000 பிள்ளைகள் உள்ளூரில் இடம்பெயர்ந்துள்ளார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் பலர் திரும்பத் திரும்ப இக்கதிக்குள்ளாகியுள்ளார்கள். தற்போது 250,000 வரையான பிள்ளைகள் புலம் பெயர்ந்து அவதிப்படுகிறார்கள். பல இடங்களில் சுகாதார சேவைகள், பாடசாலைகள் ஆகியன மிகமோசமாகச் சீர்குலைந்துள்ளன. தொற்றுநோய்கள், குறிப்பாக மலேரியா, நாட்டின் ஏனைய பாகங்களைப் பார்க்கிலும் வடக்கிலும் கிழக்கிலும் பாரிய அளவில் பெருகியுள்ளன. நோய் நொடி, புலப்பெயர்வு, அன்றாட உணவு விநியோகச் சீர்குலைவு ஆகியவற்றுடன் போசாக்கின்மையும் சேர்ந்து அப்பாவிப் பிள்ளைகளை அல்லற் படுத்துகின்றன. பாடசாலைவகுப்புகளில் இட நெருக்கடியால் அவர்கள் அவதிப்படுகிறார்கள். ஆசிரியர் பற்றாக்குறை மற்றுமொரு பிரச்சினை. பெயர் பதிந்த பிள்ளைகளில் 40 சதவீதமானோர் வரை பள்ளிக்கூடம் செல்வதில்லை. ஆயிரக்கணக்கான பிள்ளைகள் தம் பெற்றோரில் ஒருவரையோ இருவரையுமோ இழந்திருக்கிறார்கள். பலர் குரூரச்செயல்களை நேரில் கண்டிருக்கிறார்கள். அனேகமாக எல்லாப் பிள்ளைகளுமே பயத்தையும் சஞ்சலத்தையும் அனுபவித்திருக்கிறார்கள். இடம்பெயர்ந்த பிள்ளைகளுக்கு அரசாங்கமும் மனித நேயமுகவரகங்களும் உணவும், நிவாரணப் பொருள்களும் வழங்கிவந்தாலும் பாதுகாப்புக் காரணங்களினாலும் போக்குவரத்து மற்றும் தடைகளினாலும் அவற்றின் விநியோகம் தாமதமாகின்றன; அல்லது மட்டுப்படுத்தப்படுகின்றன. பல பகுதிகளில் பிள்ளைகள் பிணக்கைத் தவிர உலகில் வேறொன்றும் இல்லை என்ற மயக்கத்தில் இனவாரியான சிந்தனையும் போர்க்குணமும் கொண்டவர்களாய் வளர்ந்து வருகிறார்கள். பலர் பிணக்கில் தீவிரமாக இறங்கவேண்டி ஏற்பட்டுள்ளது. சிறுமிகளும் பெண்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லுறவுக்குட்பட்டு மானபங்கமடைந்துள்ளார்கள். ஆற்றாமை காரணமாக, சலுகைகளையும் உதவிகளையும் பெறும் பொருட்டு பாலியல் பலாத்காரங்களுக்கு இடங்கொடுப்போர் பலர். மிதி வெடிகள், பீரங்கிக்குண்டுகள் மாதந்தோறும் குடிமக்கள் பலரை பலியெடுக்கின்றன. இவர்களில் பெரும்பாலானவர்கள் பிள்ளைகளே.

இலங்கையில் பிணக்கினால் இலட்சக்கணக்கான பிள்ளைகளின் வாழ்க்கை ஏற்கனவே பாழாகிப்போயிருக்கிறது. சமூகக் கட்டமைப்புகள் சீர்கெட்டமை, மற்றும் பிள்ளையின் உடல், உள, உணர்வார்ந்த, ஒழுக்க, விவேக, சமூக, ஆத்மார்த்த வளர்ச்சிக்கு அடிப்படையாகவுள்ள உறவுகள் தறிகெட்டுப்போனமை பிள்ளையின் தனிப்பட்ட வாழ்க்கையை மட்டுமல்லாமல் முழுச் சமுதாயத்தையுமே நாசமாக்கி வருகின்றன.

## பிள்ளைப் பருவம் மனித உரிமையாகும்.

ஆயினும் இதைவிடப் பாரதூரமான உரிமைமீறல் பிள்ளையின் பாலப்பருவத்தையே பறித்தெடுப்பதாகும். பெரியவர்களாகி வாழ்க்கையின் பொறுப்புகளாலும் சுமைகளாலும் நசுங்குதற்கு முற்பட்ட வளர்ச்சிக் காலமே பாலப்பருவம். பாலப்பருவ அனுபவங்களே வளர்ந்த பின் எமது குண இயல்புகளை நிர்ணயிப்பன. ஆயுதப்பிணக்குச் சூழ்ந்த சுற்றாடலில் வளரும் பிள்ளைக்கு, கவலையில்லாமல் விளையாடவோ, பிள்ளைப்பருவ நாட்டங்களில் களிப்படையவோ, தோழமை பூணவோ, தனித்திருக்கவோ அவகாசம் கிடைப்பதரிது. பிள்ளை விரைவாக முதிர்ச்சியடைந்து விடுகிறது. வளர்ந்தவர்களின் அச்சங்கள், சஞ்சலங்கள், விரக்திகள், வெறுப்புகள் யாவும் அதைப் பீடித்துக்கொள்கின்றன. இவை கட்டுமீறிப்போகவும் கூடும். ஏனென்றால், பெரியவர்களைப் போல நிதானத்தைக் கடைப்பிடிப்பதற்கு வேண்டிய மாற்று அனுபவங்களும் முதிர்ச்சியும் அந்தப் பிள்ளைக்கு இல்லாமல் போய் விடுகின்றன. இன்றைய பிள்ளைகள் நாளைய பெரியவர்களாகும் போது இயல்பான பாலப்பருவத்தின் தழும்புகள் பிணக்கின் ஆணி வேரை இனங்காண இடமளிக்காது போகலாம்.

## சமாதானத்துக்காகப் பணியாற்றுவோம்

இன்று பாலப்பருவத்தைப் பறிகொடுத்து வரும் பல இலட்சக் கணக்கான பிள்ளைகளைக் காப்பாற்றி மீட்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுமாறு "*ஆக்கப்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பணிக்கு ஓர் அழைப்பு*" உங்களுக்கு அழைப்பு விடுக்கிறது. பிள்ளைகளே சமாதானத்தின் சரணாலயங்கள் என்னும் கொள்கையை எமது அன்றாட பொது வாழ்விலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் கடைப்பிடித்தோமானால் பாலப்பருவத்தின் உரிமையைப் பேணுவதுடன் அமையாது எமது பிள்ளைகளைக் காப்பாற்றக்கூடியதான சமாதானத்துக்கே அத்திவாரம் அமைப்பவர்களாவோம்.

## பிள்ளைகள் தொடர்பான பிரச்சினைகளும் போர்ச் சாதனங்களும்

ஆயுதப்பிணக்குகளில் எந்தவகையிலும் தள்ளப்படாதிருக்கும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு என்னும் கொள்கை ஆயுதப்பிணக்கில் பிள்ளைகளை நேரடியாக ஈடுபடுத்துதல் தொடர்பானது மட்டுமல்ல; எதிரிகளை அவமதிப்பதற்கு பிள்ளைகள் சார்ந்த பிரச்சனைகளை பயன்படுத்துதலையும் அடக்கியதாகும். அவ்வாறான நடவடிக்கைகள் ஆயுதப்பிணக்கும் பிள்ளைகளின் துன்பமும் தொடர்ந்து நீடிப்பதற்றே வழி வகுக்கும். ஐ.நா. அறிக்கையின்படி ஆயுதப் பிணக்குகளில் பிள்ளைகள் படும் பாட்டுக்கு நாம் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகளும் குற்றவாளிகளும் ஆகிறோம். இந்த "*ஆக்கப்பணிக்கு ஓர் அழைப்பானது*" பிணக்கில் சம்பந்தப்பட்ட எந்த ஒரு தரப்பினரும் பிள்ளைகளின் உரிமைகளைப் பற்றி குறிப்பிடுவதை வெகு கவனமாகத் தவிர்க்கிறது. அவ்வாறே இந்தக் கொள்கையினைக் கடைப்பிடிக்கும் சகல தரப்பினரும் பிள்ளைகளின் பிரச்சினைகளை பிரச்சார நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதையும் தவிர்த்தல் வேண்டும். மாறாக சகல தரப்பினரும் தத்தமது வல்லமைக்கும் செல்வாக்குக்கும் ஏற்றவகையில் பிள்ளைகளுக்கு எந்த வகையில் உதவி செய்யலாமென்பதைக் கருத்திற்கொள்ளுமாறு தூண்டப்படுகிறார்கள்.

இதற்குப் பிணக்குடன் சம்பந்தப்படாதவர்கள் பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்கள் என்னும் செய்தியை சகல தரப்பினருக்கும் பரப்புதல் அவசியம். இந்தக்கொள்ளைகள் பின்பற்றப்படுவதையும் அவர்கள் அவதானித்தல் வேண்டும்.

## மாசெல் அறிக்கை - பொதுவான செயற்பாட்டுக்கான களம்

ஐ.நா. பொதுசபை மேற்கொண்ட 1993 டிசெம்பர் மாதத்தின் 48/157 இலக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானத்தையடுத்து ஐ.நா. செயலாளர் நாயகம், ஆயுதப் பிணக்குகளால் பிள்ளைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றி ஆராயும்படி கிராசா மாசெல் அம்மையாரை நியமித்தார். ஆயுதப்பிணக்கினால் பிள்ளைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றிய அறிக்கை 1996 நவம்பர் மாதத்தில் ஐ.நா. பொதுச்சபையின் 51ஆவது கிரமமான அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கை பல சந்தர்ப்பங்களில் மாசெல் அறிக்கை எனக் குறிப்பிடப்படுவதும் உண்டு. ஆயுதப்பிணக்குகளில் பிள்ளைகள் எந்தெந்த விதமாகப் பாதிக்கபப்டுகிறார்கள் என்பதை விரிவாக ஆராய்ந்துள்ள இந்த அறிக்கை, அவர்களைக் காத்துப் பராமரிப்பதற்கான வழிவகைகளையும் விதந்துரைத்திருக்கிறது. ஐ.நா. பொதுச்சபையின் ஒப்புதலைப்பெற்ற உலகளாவிய அரசாங்கங்கள், அரச சார்பற்ற தரப்பினர், குடிமக்கள் சமூகம், சர்வதேச சமுதாயம் ஆகியவற்றுக்கு அறைகூவல் விடுக்கும் இந்த அறிக்கை பொதுவான செயற்பாட்டுக்கேற்ற களமாக விளங்குகிறது. எல்லாப் பிள்ளைகளையும் உள்ளடக்கிய அதன் பற்றுறுதியும் சமாதானத்தை நிலைநாட்டும் முயற்சிக்கு வலுவூட்டுவதாக அமைகிறது.

## ஆக்கப்பணிக்கு ஓர் அழைப்பு - மாசெல் அறிக்கையை இலங்கையில் செயலாக்குதல்.

"*இந்த ஆக்கப்பணிக்கு ஓர் அழைப்பானது*" மாசெல் அறிக்கையினை இலங்கையின் நிலைமைக்கேற்ற கொள்கைகளினதும் நடவடிக்கைகளினதும் தொகுப்பாக உருமாற்றுகிறது. நாம் அனைவரும் இந்தக்கொள்கைகளின் வழிநின்று நம்மால் இயன்றவரையில் சிறந்த முறையில் பங்குகொள்ளவேண்டுமென்று அது அழைப்பு விடுக்கிறது.

ஆயுதந் தாங்கியவரோ, குடிமகனோ, சார்புடையவரோ, சார்பற்றவரோ, தலைவரோ, தொண்டரோ, அரசாங்கமோ, எதிர்க்கட்சியோ, அரசாங்க ஊழியரோ, தனிப்பட்ட பிரசையோ, உயர்தொழில் நிபுணரோ, கைவினைஞரோ, ஆணோ பெண்ணோ, சிறுவனோ சிறுமியோ யாராக இருந்தாலும் நம் ஒவ்வொருவருக்கும் இதிலே ஒரு பங்குண்டு. இந்தப்பணியை எமது கடமைகளை நிறைவேற்றும் போது மட்டுமல்லாமல் எமது குடும்பங்கள், சமுதாயங்களிலும் நிறைவேற்றுதல் வேண்டும். "நான் என்ன செய்ய வேண்டும்" என்னும் உங்கள் கேள்விக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"*ஆக்கப்பணிக்கு ஓர் அழைப்பு*" தரும் பதில் : "இதைப்படித்து பிணக்கில் பாதிப்புற்ற பிள்ளைகளின் உரிமைகளைப் பேணிக்காப்பதில் உங்களுக்குள்ள பொறுப்புகளைச் சிறந்தமுறையில் எப்படி நிறைவேற்றலாமென முடிவுசெய்யுங்கள்" என்பதே.

"*ஆக்கப்பணிக்கு ஓர் அழைப்பு*" பிணக்கில் பாதிப்படைந்த சகல பிள்ளைகளின் சார்பிலும் விடுக்கப்படுகிறது. முன்னணிக்கு வெகு தூரத்தில் உள்ளவர்களும் முன்னைய, இன்றைய சகல பிணக்குகளிலும் பாதிப்படைந்தவர்களும் இதில் அடங் குவர்.

## குறிப்பாக மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகள்.

மாசெல் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு "*ஆக்கப்பணிக்கு ஓர் அழைப்பு*" என்னும் இப்பத்திரம் அழைப்பு விடுக்கிறது. திட்டவட்டமான நடவடிக்கைகள் இணைப்பு 1இல் விவரிக்கப்பட்டுள்ளன.

❖ உள்நாட்டில் இடம்பெயர்ந்தும் துணையற்றும் இருக்கும் பிள்ளைகளுக்கு உதவுதல்; குறிப்பாக, குடும்பத்தை விட்டு பிரிவதை தடுத்தல்.

❖ உணவு, அடிப்படைச் சுகாதார சேவைகள், நீர் விநியோகம், வடிகால் வசதிகள் ஆகியன பிணக்கில் சிக்கிய பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் தொடர்ந்து கிடைக்க அல்லது மீண்டும் கிடைக்கச் செய்தல்.

❖ கல்வி கற்கும் வாய்ப்பு தொடர்பறாதிருக்கவும் மீளக்கிடைக்கவும் உதவுதல்.

❖ பிணக்கினால் உளவியல் வாரியாகப் பாதிக்கப்பெற்ற பிள்ளைகளுக்கு உதவுதல். இந்தப் பாதிப்பு குடும்ப அங்கத்தவர் ஒருவரை இழத்தல், வன்செயலுக்கு நேரடியாக உள்ளாகுதல் போன்ற பாரதூரமான சம்பவம் தொடக்கம் அனேகமாக எல்லாப் பிள்ளைகளுக்குமே ஏற்படக்கூடிய கிலேசம், சஞ்சலம் ஈறாகப் பலதரப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிணக்கில் பாதிப்புற்ற பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் மனிதாபிமான அடிப்படையிலான பொருள்களும் சேவைகளும் தங்குதடையின்றி கிடைப்பதை உறுதிசெய்தல்.

- 18 வயதுக்கு குறைந்த எந்தப் பிள்ளையும் ஆயுதந்தாங்கிப் போர்புரிய அணிதிரட்டப்படாதிருப்பதை உறுதி செய்தல். ஏற்கெனவே திரட்டப்பட்டவர்களை மீட்டெடுத்து சமுதாயத்தில் புனர்வாழ்வளித்தல்.

- மாதரை இழிவுசெய்யும் வன்செயல்களைத் தடுத்தல்.

- குடிமக்களை, அதிலுங் குறிப்பாக பிள்ளைகளை காயப்படுத்தும் மிதிவெடிகளின் அபாயத்தைக் குறைப்பதும் இறுதியில் முற்றாக நீக்குதலும். உடற் காயமுற்ற பிள்ளைகளுக்கு புதுவாழ்வளிக்க ஏற்பாடுகள் செய்தல்.

- பிள்ளைகள், பெண்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான தேசிய சட்டங்களை சர்வதேச உடன்பாடுகளுக்கு அமைவானதாக்கும் நடைமுறையை ஊக்குவித்தலும் அந்தச் சட்டங்கள் நடைமுறையாவதை ஆதரித்தலும்.

- பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்கள் என்னும் கருத்தினையும் அதனோடு சார்ந்த கொள்கைகளையும் செம்மையான நடைமுறைகளையும் ஆதரிக்கும் பாங்கான தொடர்பாடல் மற்றும் பிரசார இயக்கங்களையும் ஏனைய் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

- பிள்ளைகளின் உரிமைகள் படிப்படியாகக் கைகூடுதற்கு அமைவான நிரந்தர நிறுவனங்களையும் அமைப்புகளையும் அரசாங்க மற்றும் குடிமக்கள் சமுதாயத்தில் வலுப்படுத்துதல் அல்லது தாபித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

*மாசெல் அறிக்கையின் கடைசிப்பந்தியில் காணப்படும் வாசகம் வருமாறு*

பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்கள் என உரிமை பாராட்டுவோமாக. இவ்வாறாக, பாலப்பருவம் பங்கப்படுத்தமுடியாததொன்றெனவும் ஆயுதப் பிணக்குகளின் அகோர விளைவுகளிலிருந்து எல்லாப் பிள்ளைகளும் காப்பாற்றப்பட வேண்டுமெனவும் மனித குலம் ஈற்றில் பிரகடனம் செய்யும். நாமெல்லோரும் ஓரணியில் திரள்வதற்கு பிள்ளைகள் தனித்துவமான, வலுமிக்க உந்துசக்தியாக விளங்குகிறார்கள். அவர்களின் துயரத்துக்கு ஏதுவாக உள்ள பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு, பிள்ளைகள் மீது ஏற்பட்டுள்ள உலகளாவிய அக்கறை புதிய வாய்ப்புகளை வழங்குகின்றது. பிள்ளைகள் பால் கவனத்தை ஈர்ப்பதன் மூலம் ஆயுதப் பிணக்கினால் என்னென்னவெல்லாம் அழிந்தொழிந்துபோகின்றன என்பதையும் எஞ்சுவதோ சொற்பமே என்பதையும் அரசியல்வாதிகள், அரசாங்கங்கள், இராணுவம் மற்றும் ஆட்சியதிகாரமற்ற அமைப்புகள் முதலியன உணரத் தலைப்படும். பிள்ளைகளைப் போசித்துக் காக்கும் இயல்பூக்கத்தினை மீண்டும் வசப்படுத்திக்கொள்ள இந்த வாய்ப்பினை உபயோகிப்போமாக. எமக்குள்ள தர்மாவேசத்தினை ஆக்கப்பூர்வமான செயலாக மாற்றுவோமாக. சமாதானத்தை ஆண்டனுபவிக்கும் உரிமை எமது பிள்ளைகளுக்கு உண்டு. சமாதானம் ஒவ்வொரு பிள்ளையினதும் உரிமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு 1

# பிள்ளைகள்: சமாதானத்தின் சரணாலயங்கள்

*இதனைச் சாதிப்பதற்கான கொள்கைகளும் செம்மையான நடைமுறைகளும்*

## *உள்நாட்டில் இடம்பெயர்ந்த பிள்ளைகள்*

### *கொள்கை*

❖ பிள்ளைகள் குடும்பத்தவர்களைப் பிரியாமல் அவர்களோடு சேர்ந்து, வெளியேற்றப்படுவதை உறுதி செய்யவும். பிள்ளைகள் குடும்பங்களை விட்டுப் பிரிவதைக் கூடுமானவரை தவிர்க்கவும்.

### *செம்மையான நடைமுறைகள்*

1. (அ) பிள்ளைகள் உள்ள குடும்பங்களையும் (ஆ) துணையற்ற பிள்ளைகளையும் இனங்கண்டு அவர்கள் உயிர் பிழைப்பதற்கும் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பான தேவைகளுக்கும் முன்னுரிமை அளிக்கவும்.
2. குழந்தைகள், பாலர் பாடசாலைப் பிள்ளைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் மற்றும் பெண் அல்லது பிள்ளையின் தாபரிப்பில் உள்ள குடும்பங்கள் ஆகியோரை இனங்கண்டு அவர்களின் விசேட தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கவும்.
3. புதிதாக இடம்பெயர்ந்த குடும்பங்களுக்குக் "குடும்ப நிவாரணப் பொட்டல" மொன்றை வழங்க ஏற்பாடு செய்யவும். இதிலே அத்தியாவசியமான இருப்பிடப் பொருள், பாய்கள், சமையல் மற்றும் வீட்டுப் பாவனைப் பாத்திரங்கள் ஆகியன அடங்க வேண்டும்.
4. துணையற்ற பிள்ளைகளைப் பாலியல் வன்செயல்கள் நிவாரணம் வழங்குவதில் பாகுபாடு, ஆயுதப் படைகளில் அணிசேர்த்தல் ஆகியவற்றிலிருந்து காப்பதற்கான விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.
5. துணையற்ற பிள்ளைகளை அவர்களின் குடும்பத்தவர்களுடன் மறுபடியும் சேர்க்கும் பொருட்டுக் குடும்பங்களைத் தேடும் திட்டங்களை மேற்கொள்ளவும்.
6. துணையற்ற பிள்ளைகளைக் குடும்பப் பின்னணியில் சேர்ப்பதற்கேற்ற பரிகாரமொன்றைக் காணும்வரை அவர்களுக்கு தற்காலிகமான மாற்றுப் பராமரிப்புக்கு ஏற்பாடு செய்யவும்.
7. பிள்ளைகளின் (பிறப்புச் சான்றுப் பத்திரங்கள், அடையாள அட்டைகள் முதலியன) தொலைந்துவிட்ட அடையாளச் சான்றுப் பத்திரங்களை மீட்டுக் கொடுக்க விசேட நடவடிக்கை எடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 பூர்வீக இடத்திலோ புதிய இல்லத்திலோ மீளக் குடியமர்த்தும் போது "குடும்ப மறுகுடியமர்வுப் பொட்டல" மொன்றை வழங்க ஏற்பாடு செய்யவும். இதிலே வீடும் மலசல கூடமும் அமைப்பதற்கு அல்லது மீளமைப்பதற்கு வேண்டிய உதவி, அத்தியாவசிய வீட்டுப் பாவனைப் பாத்திரங்கள், உணவுற்பத்தி மற்றும் பொருள் தேடும் முயற்சிகளுக்கு வேண்டிய உபகரணங்கள் என்பன அடங்க வேண்டும்.

9 மீளக் குடியமர்த்தும் போது "சமுதாய மறுகுடியேற்றப் பொட்டல" மொன்றை வழங்க ஏற்பாடு செய்யவும். இதிலே அடிப்படைத் தளக் கட்டமைப்புகள், போக்குவரத்துத் தெருக்கள், பாலங்கள், நீர் விநியோக ஏற்பாடுகள் முதலிய விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

10 சுகாதாரம், போசாக்கு, கல்வி, உளவியற் பாங்கான சமூகச் சீரமைப்பு ஆகிய பிரிவுகளில் விவரிக்கப்பட்டுள்ள எல்லா நடவடிக்கைகளிலும் உள்ளூரில் இடம்பெயர்ந்த பிள்ளைகளுக்கு முன்னுரிமை அளிக்கவும்.

## சுகாதாரமும் போசாக்கும்

*கொள்கைகள் :*

- நோய் தடுப்பு, சிகிச்சை ஆகியவற்றில் குறைந்தபட்ச அடிப்படைச் சேவைகளேனும் கிடைப்பதை உறுதி செய்தல். இதிலே பிள்ளைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் ஆகியோர் முன்னுரிமை பெறல் வேண்டும்.
- பிணக்கு நடைபெறும் காலங்களில் வழக்கமான சேவைகளை வழங்குதல் சாத்தியமல்லவென்பதால் மதியூகமான, நிலைமைக்குத் தக்கதான பரிகாரங்கள் அவசியம்.

செம்மையான நடைமுறைகள்

1. அடிப்படையான நோய் தடுப்பு அமைப்புகள், சேவைகள், சுத்தமான நீர் விநியோகம், கழிவு நீக்குதல் ஆகிய சேவைகளைப் பராமரித்தலும் புதுப்பித்தலும். இதிலே இனவிருத்தி வைத்தியம், பாதுகாப்பான தாய்மை, தாய்ப்பாலூட்டுதலை ஊக்குவித்தல், தடுப்பு மருந்தேற்றுதல் என்பன அடங்க வேண்டும்.

2. அடிப்படையான சிகிச்சைச் சேவைகளைப் பராமரித்தலும் புதுப்பித்தலும். இதிலே பிள்ளைகள், பெண்கள் ஆகியோரின் பிரதான சுகாதாரப் பிரச்சினைகள் முக்கிய கவனம் பெறல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. காயமுற்ற பிள்ளைகளுக்கு, அதிலும் குறிப்பாக மிதிவெடிகளுக்கு இலக்கானவர்களுக்கு, சிகிச்சை அளித்துப் புனர்வாழ்வளித்தல்.

4. சுகாதாரம், போசாக்கு ஆகியனவற்றின் நிலைமையை அவதானிப்பதுடன் பிணக்கில் பாதிப்புற்ற மக்களின் தேவைகளைக் கணித்தல்.

5. அவசர சேவைகள் ஆற்றும் திறனுள்ள சுகாதார ஊழியர்களைப் பயிற்றுதல். இவர்கள் எதிர்பாராத நிலைமைகளைச் சமாளிக்கத் தக்கவர்களாய் இருத்தல் வேண்டும்.

6. ஆயுதப்பிணக்கு நிகழும் பகுதிகளில் பணியாற்றும் சுகாதார ஊழியர்களுக்கு அடிப்படையான ஆதரவு கிடைப்பதை உறுதி செய்தல்.

7. சுகாதார நிறுவனங்களைச் சேதப்படுத்துவதைத் தவிர்த்து, பிணக்கின் பாதக விளைவுகளிலிருந்து சுகாதார சேவைகளைப் பாதுகாத்தல் வேண்டுமெனச் சகல தரப்பினருக்கும் எடுத்துரைத்தல்.

8. அத்தியாவசிய சுகாதார சேவைகள் பிணக்கில் ஈடுபட்டிருக்கும் சகல தரப்பினருக்கும் கிடைப்பதை அனுமதிக்கும் பொருட்டு "அமைதி நாள்கள்" "சமாதானச் சாலைகள்" ஆகியவற்றை ஊக்குவித்தல்.

9. போதுமான அளவு உணவை, அதிலும் குறிப்பாக பால்மறக்கும் பருவப் பிள்ளைகளுக்கு உகந்த உணவை, உற்பத்தி அல்லது கொள்வனவு செய்ய வகையற்ற குடும்பங்களுக்குக் காலமறிந்து, சமத்துவனான முறையில் உணவு நிவாரணம் வழங்குதல்.

10. கமத்தொழில், கடற்றொழில் உள்ளீடுகள் கிடைப்பதை உறுதிப்படுத்துதல். இதிலே, உபகரணங்கள், விதைகள், பீடைநாசினி முதலியன அடங்க வேண்டும்.

## கல்வி

*கொள்கைகள்*

- கல்வி முயற்சிகளை ஆதரித்தல், சகல மனிதநேய உதவியிலும் முன்னுரிமை அம்சமாக அமைதல் வேண்டும்.
- கல்வியானது பிள்ளையின் அடிப்படை உரிமையும் போதனையின் அத்தியாவசிய அம்சமுமாகும்.

*செம்மையான நடைமுறைகள்*

1. கல்வி அமைப்புகளைப் பேணுதலும் புனரமைத்தலும்.

2. தேவைப்படும் சந்தர்ப்பங்களில் தற்காலிக அடிப்படையில் கல்வி புகட்டுதற்கான மாற்று அமைப்புகளையும் கட்டுமானங்களையும் ஏற்பாடு செய்தல். இது விடயத்தில் சமுதாயத்தினரை முடிந்த வரை ஈடுபடுத்துதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பயிற்றப்பெற்ற ஆசியர்கள் பற்றாக்குறையாக இருக்குமிடங்களில் "தொண்டர்ஆசிரியர்களைப்" பயிற்றுதல்.

4. பிள்ளைகள் தம் சுயத்துவத்தை இழந்த போதும் பள்ளி செல்லும் வாய்ப்பினை உறுதி செய்தல்.

5. எல்லாப் பிள்ளைகளுக்கும் இலவச சீருடைகளை உறுதி செய்தல். இடப்பெயர்வினால் இழந்த சீருடைகளுக்குமாற்றுச் சீருடை வழங்குதல். தற்காலிகமாக சீருடைஅற்றிருக்கும் பிள்ளைகளுக்குப் பாகுபாடு காட்டப்படாது.

6. பாடப்புத்தகங்கள் கிடைப்பதை உறுதிசெய்தல்; தேவையான ஏனைய உள்ளீடுகளை வழங்குதல்.

7. ஆசிரியர்களுக்குப் பயிற்சியும் உபகரணங்களும் கிடைக்க வழிசெய்தல். விசேடமாக படிப்புத் தடைப்பட்ட பிள்ளைகள் விடயத்தில் இது முக்கியம்.

8. பிள்ளைகள் மனவதிர்ச்சிக்கு உள்ளாகியிருக்கிறர்களா என்பதை இனங்கண்டு அதற்கேற்ற முறையில் அவர்களை நடத்த ஆசிரியர்களைப் பயிற்றுதல்.

9. பிள்ளைகளின் உரிமைகள், கண்ணிவெடிகள் பற்றிய அறிவு போன்ற புதிய விடயங்களை சேர்த்துக்கொள்வதந்கு வேண்டிய பயிற்சிகளையும் பொருள்களையும் ஆசிரியர்களுக்கு வழங்குதல்.

10. "சமாதானத்துக்கான கல்வி" "பிணக்குத் தீர்த்தல் தொடர்பான கல்வி" என்பன பற்றி வகுப்புக்கள் நடத்துவதற்கு வேண்டிய பயிற்சியையும் பொருள்களையும் ஆசிரியர்களுக்கு வழங்குதல்.

11. ஒருவரை ஒருவர் சந்தித்தல், விளையாட்டுகள், நாடக, கவிதை, கட்டுரைப் போட்டிகள் போன்ற சமூக உறவுகளை வளர்க்கும் நடவடிக்கைகளைப் பிள்ளைகளுக்கிடையில் உருவாக்குதல்.

12. மேற்படி நிகழ்ச்சிகளில் இளைஞர்கள், யுவதிகள் ஆகியோரையும் பொருத்தமான சந்தர்ப்பங்களிற் சேர்த்துக்கொள்ள விசேட நடவடிக்கைகளை எடுத்தல்.

13. பாலர் பாடசாலைகளுக்கு, அதிலும் விசேடமாக விளையாட்டு மற்றும் சஞ்சலத்தைத் தணிக்கும் நடைமுறைகளுக்கு, ஆதரவளித்தல்.

14. பிள்ளைகள், இளைஞர்கள் ஆகியோர் பாடசாலையிற் பெயர் பதிதல், பரீட்சை எழுதுதல் முதலியவற்றைச் செய்ய இடமளிக்கும் பொருட்டு "அமைதி நாள்கள்" "சமாதானச் சாலைகள்" ஆகியவற்றை ஊக்குவித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளவியல் சார்ந்த சமூகச் சீரமைப்பும் சமூகப் புனர்வாழ்வும்

கொள்கைகள்

❖ பிள்ளைக்குச் சிறந்த இடம் குடும்பமும் சமுதாயமுமே. குடும்பம், சமுதாயம், உள்ளூர்ப்பண்பாடு, மரபுகள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்ட நடைமுறைகள் பெருவெற்றி தரும்.

❖ பிள்ளைகளை இல்லங்களில் தங்கவைத்து தாபன வாரியான வரைமுறைகளுள் அடைத்தல் ஒரு சிலருக்கே நன்மை பயக்கும். ஆகவே மிகமோசமாகப் பாதிக்கப் பெற்ற பிள்ளைகளுக்கென அவ்வாறான நடைமுறைகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஏனையோருக்கு குடும்பம் அல்லது சமுதாயத்தை அடித்தளமாகக் கொண்ட பரிகாரங்களைத் தேடும் முயற்சி தொடரவேண்டும்.

பிள்ளை எந்த அளவுக்கு இயல்பான உணர்வை மீளவும் பெறச் செய்ய முடியுமோ அதற் கேற்றவாறாக செயற்திட்டங்கள் அமைதல் வேண்டும். ஆலோசனையை மட்டுமே பிரதானமாகக் கொண்ட நடவடிக்கைகள் ஒரு சிலருக்கே பயன்படும். ஏனென்றால் அத்தகைய ஆலோசனைகளை வழங்க ஆற்றலும் பயிற்சியும் பெற்றவர்களுக்கே இயலும். இவர்களைத் தேடியடைதல் சிரமம்.

செம்மையான நடைமுறைகள்

1. முன்னர் நிலைபெற்றிருந்த சமூக நல அமைப்புக்களைப் புதுப்பிக்கவும்.
2. உளவியல் சார்ந்த சமூகப் புனரமைப்பு விடயங்களை எல்லாச் செயற்திட்டங்களிலும் சேர்த்துக்கொள்ளவும்.
3. பாடசாலைகளிற் சேருதல், குடும்பக் கடமைகள், சமூகசேவைகள், கலை மற்றும் விளையாட்டுகள் போன்ற வழமையான நடவடிக்கைகளை கூடுமான விரைவில் மீளவும் மேற்கொள்வதன் மூலம் மனவடுக்கள் இயல்பாகக் குணமடைய வழி வகுக்கவும்.
4. வளரிளம் பருவத்தினர் மீது விசேட சிரத்தை காண்பிக்கவும். சமுதாயத்தைத் தளமாகக் கொண்ட நிவாரண மற்றும் புனர்நிர்மாண வேலைகளில் அவர்களை ஈடுபடுத்தவும்.
5. பள்ளிப்படிப்பை முடித்து வெளியேறுவோர் தகுந்த வேலைவாய்ப்புப் பெற ஊக்குவிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. படுபாதகமான முறையில் மனவதிர்ச்சிக்கும் அச்சத்துக்கும் உள்ளான பிள்ளைகள், இளைஞர், யுவதிகள் ஆகியோருக்கு ஆலோசனை வழங்கி ஆதரிக்கவும்.

## மனிதநேயப் பொருள், பண்டங்கள் கிடைக்க வகை செய்தல்.

*கொள்கைகள்*

- மனிதநேயப்பொருள், பண்டங்களை எடுத்துச் செல்லுதற்கும், வழங்குதற்கும் எத்தகைய தடைகளும் இருத்தலாகாது. அந்த நடவடிக்கைகளுக்குத் தகுந்த வசதியளித்தல் வேண்டும்.
- மேற்படி கொள்ளைகளுக்குப் பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகள் குறுக்கே நிற்கும் பட்சத்தில் மனித நேய அக்கறைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் தகைமை உடையவர்கள் மட்டத்திலே அது விடயம் தீர்மானிக்கப்படல் வேண்டும்.
- மனித நேயப்பொருள், பண்டங்கள் குறிக்கப்பட்ட மனித நேய நோக்கங்களுக்கு மட்டுமே உபயோகிக்கப்பட வேண்டும்.

*செம்மையான நடை முறைகள்.*

1. தடையிலிருந்து விதி விலக்குப் பெற்ற மனித நேயப்பொருள், பண்டங்களை மீளாய்வு செய்யவும்.
2. அவை, தேவைப்படும் இடங்களில் இலவசமாகவும் துரிதமாகவும் வழங்கப்படுவதை மேற்பார்க்கவும்.
3. அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல், மனித நேய முகவரங்களின் விண்ணப்பங்களை கவனத்திற்கொள்ளுதல் ஆகியவற்றுக்கான அமைப்பபுக்களை சீராக்கவும்.
4. மனிதநேயப்பொருள், பண்டங்களை இலவசமாகவும் துரிதமாகவும் பெறுவதில் இடர் அனுபவிக்கக்கூடிய மக்கள் குழுக்கள் எதிர்நோக்கும் வில்லங்கங்களை அவதானிக்கவும்.
5. மனிதநேயப்பொருள், பண்டங்களை வழங்கும் பணியில் ஈடுபடும் ஊழியர்கள் அவற்றைச் செலவின்றி எடுத்துச்சென்று உடனுக்குடன் சமமான முறையில் பகிர்ந்தளிக்கப் பயிற்றவும்.

## பாலியப் போராளிகள்

*கொள்கைகள்*

- இலங்கையின் சிறுவர் சாசனத்தின்படியும் பிள்ளையின் உரிமைகள் தொடர்பான சமவாயத்தின் விருப்பத் தேர்வான உடன்படிக்கையின் படியும் 18 வயதை அடையாத பிள்ளை போர் நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்குபெறலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ பதினெட்டு வயதை அடையாத பிள்ளை ஆயுதப் படையிற் சேர்த்துச் கொள்ளப் படலாகாது.

## செம்மையான நடைமுறைகள்

1. இலங்கையில் ஆயுதப் படைக் கூறு அல்லது போரணியில் சேர்த்துக் கொள்ளுதற் குரிய குறைந்த பட்ச வயதெல்லை பதினெட்டாக இருக்க வேண்டுமென்ற விதியைக் கடைப்பிடிக்குமாறு படைதிரட்டுவதில் ஈடுபட்டிருப்போருக்கும் பொதுமக்களுக்கும் வலியுறுத்தவும்.

2. போராளி ஒருவர் இந்த வயதெல்லைக்குக் குறைந்தவரெனச் சந்தேகிக்கும் பட்சத்தில் அதிகாரிகளும் மனித மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான அதிகாரம் பெற்றவர்களும் சட்டப்படி விசாரணை செய்ய அனுமதிக்கவும்.

3. போராளிகளாகப் பங்குகொண்டமையினால் மனவதிர்ச்சியும் அச்சமும் அடைந் துள்ள பிள்ளைகளை இனங்கண்டு, ஆதரவளித்து உரிய இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கேற்ற நடைமுறைகளையும் ஆற்றல்களையும் உள்ளூரிற் புலம் பெயர்ந்தோருக்கான நிலையங்கள் முதலியவற்றைச் சேர்ந்த ஊழியர்கள் கற்க வகை செய்யவும்.

4. முன்னைய பாலியப் போராளிகள் தம் குடும்பத்தவர்களுடன் மீண்டும் சேர்ந்து கொள்வதற்கும் கூடிய விரைவில் மீண்டும் பாடசாலை செல்லச் செய்வதற்கும் முன்னுரிமை அளிக்கவும்.

5. முன்னைய பாலியப் போராளிகளின் குடும்பத்தவர்களுக்கு உபகரணங்கள், விதைகள், பாத்திரங்கள், பாடசாலைச் சீருடைக்கான துணிமணி ஆகியன அடங்கிய 'சமாதான வெகுமதிப் பொட்டலம்' பிள்ளையின் சேமநலனுக்கும் சமுதாயத்தில் மீண்டும் இணைந்து கொள்வதற்கும் வசதி செய்யும் வகையில் கொடுக்கப்படல் வேண்டும்.

6. பிணக்கைத் தீர்ப்பது தொடர்பான எந்த முடிவிலும், பாலியப் போராளிகள் போரணியிலிருந்து விடுவிக்கப்பட்டு சமுதாயத்தில் புனர்வாழ்வு பெறுவதற்கான நடவடிக்கைகள் திட்டவட்டமாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தவும்.

## பாலியல் துர்ச்செயல்களுக்கும் பெண்மை சார்ந்த வன்செயல்களுக்கும் உள்ளாகுவோரின் பாதுகாப்பும் ஆரோக்கியமும்.

*கொள்கைகள்*

❖ பிணக்கு நடைபெறும் காலத்திற் கூட பாலியல் துர்நடத்தைகளிலும் வன்செயல் களிலும் ஈடுபடுவோர் சட்டத்தின் முழு அதிகாரத்துக்கும் உட்படுத்தப் படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாலியல் துர்நடத்தைக்கும் வன்செயல்களுக்கும் உள்ளானவர்கள் யார் எவர் என்று தெரியாதவாறு அந்தரங்கம் உத்தரவாதப் படுத்தப்படல் வேண்டும். அத்துடன் உள்ளத்தாலும் உடலாலும் அவர்கள் ஆரோக்கியமடைவதற்கு உதவியளித்தலும் வேண்டும்.
- பாலியல் துர்நடத்தை வன்செயல்கள் ஆகியன தொடர்பான ஆபத்துகளைக் குறைக்கும் பொருட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

## *செம்மையான நடைமுறைகள்*

1. நிவாரண மற்றும் புனர்வாழ்வுச் செயற்திட்டங்களில் கர்ப்பிணிகள், பெண்கள் ஆகியோரின் வம்ச விருத்தி சார்ந்த ஆரோக்கியம், உளவியல் மற்றும் சமூகச் சார்பான தேவைகள் ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ளுதல்.
2. முகாம்களிலும் சேமநல நிலையங்களிலும் ஆபத்துக்குள்ளாகக் கூடிய பெண்கள், சிறுமிகள் ஆகியோரின் பாதுகாப்பை உறுதிசெய்தல்.
3. பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு அளிப்பதற்கான ஏற்பாடுகளை அமைத்தல். இதிலே ஆலோசனை வழங்கல் ஏனைய உளவியல் மற்றும் சமூகவியல் சேவைகளும் அடங்க வேண்டும்.
4. சம்பவங்களை அறிவிப்பதற்கெனத் திட்டவட்டமான ஏற்பாடுகளை அமைத்தல். தகுந்த சட்ட நடவடிக்கைகள், புனர்வாழ்வுப் பணிகள் என்பனவும் இவற்றில் அடங்க வேண்டும்.
5. ஆயுதப் படையினர், அரசாங்க ஆளணியினர், பொதுமக்கள் அனைவருக்கும் பாலியல் துர்ச் செயல்கள் மற்றும் பெண்மை சார்ந்த வன்செயல்களைத் தடுத்தல், அவற்றைச் சமாளித்தல் என்பன தொடர்பாகப் பயிற்சியளித்தல்.

## மிதிவெடிகள்

*கொள்கைகள் :*

- இலங்கையில் பிணக்கில் சம்பந்தப்பட்டுள்ள சகல தரப்பினரும் மக்களுக்கு யமனாகவுள்ள கண்ணி வெடிகளை இல்லா தொழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையின் படி ஒழுகுதலே இறுதி இலட்சியமாகவுள்ளது.
- அதே சமயத்தில் பிணக்கில் சம்பந்தப்பட்ட தரப்பினர் எதிர்காலத்தில் எந்தக் கட்டத்திலேனும் பிள்ளைகளும் பலவீனமான மக்கள் குழுக்களும் அடிக்கடி போய் வரக் கூடிய இடங்களில் மிதிவெடிகளைப் பொறிவைப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மையான நடைமுறைகள்

1. கண்ணிவெடிகள் புதைத்த இடங்களைத் தெளிவாகக் குறிப்பிடல்.
2. குடிமக்கள் புழங்கும் இடங்களிலிருந்து கண்ணி வெடிகளை அகற்றுதல்.
3. கண்ணிவெடிகள் பற்றி அறிவூட்டும் பிரசார இயக்கங்களை, விசேடமாகப் பெண்களையும் பிள்ளைகளையும் குறிவைத்து மேற்கொள்ளுதல்.
4. கண்ணி வெடிகளுக்கு இலக்கான பிள்ளைகள் உடலாலும் உள்ளத்தாலும் குணமடைவதற்கென சமுதாயத்தைத் தளமாகக் கொண்ட புனர்வாழ்வுப் பணியை ஆதரித்தல்.
5. முழுமையான தடைக்கு உடன்பாடு காணும்வரை, இடைக்கால நடவடிக்கையாக, பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள், கிணறுகள் மற்றும் சனசமூக நடவடிக்கைகள் இடம்பெறும் பகுதிகளைச் சூழ கண்ணிவெடிகளைப் பொறிவைக்காது பாதுகாத்தல் வேண்டுமென வலியுறுத்துதல்.
6. இலங்கையில் கண்ணி வெடிகள் உபயோகிப்பதை முற்றாக நிறுத்துமாறு பிரசாரஞ் செய்தல்.

## சட்டவாக்கமும் விதிகளும்

1. தேசிய சட்டத்தைச் சர்வதேச சமவாயங்களுக்கு இசையச் செய்தல்.
2. ஆயுதப் படையினர், பாதுகாப்பு ஆளணி, சமூக சேவைகள் ஆற்றுவோர் ஆகியோருக்கு மனித உரிமைகள், மனிதநேயச் சட்டம் ஆகியன பற்றிப் போதிக்க ஏற்பாடு செய்தல்.
3. உரிமைகள் மீறப்படும் போது அதனை அறிவிக்கவும், விசாரிக்கவும் அத்துடன் சட்ட உதவி அளிக்கவும் தகுந்த அமைப்புகளை உருவாக்குதல்.
4. கல்வி தொடர்பான எல்லா நடவடிக்கைகளிலும் உரிமைகள் தொடர்பான கல்வியையும் சேர்த்துக் கொள்ளுதல்.
5. உரிமைகள் பற்றிய அறிவைப் பரப்புவதில் குடிமக்கள் சமூகத்துக்கும் அரச சார்பற்ற அமைப்புகளுக்கும் ஆதரவளித்தல்.
6. ஆட்சி அதிகாரமற்ற அமைப்புகள், மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்டத்திற் பற்றுறுதி கொள்ள ஊக்கமளித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்பாடலும் பிரசாரமும்

*கொள்கைகள்*

- "பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்கள்" என்னும் கருத்துத் தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும் வெகுசனத் தொடர்பாடலும் பிரசாரமும் அத்தியாவசிய அம்சங்களாம்.
- வெகுசனத் தொடர்பாடலும் பிரசாரமும் பக்கச் சார்பற்றதாயும் எவர் மீதும் பழி சுமத்தாது, அக்கறையூட்டுவதாயும் செயலாற்றத் தூண்டுவதாயும் அமைதல் வேண்டும்.
- குறிப்பிட்ட சம்பவங்கள் பற்றிய தொடர்பாடலும் பிரசாரமும், வழக்கமாக, சம்பந்தப்பட்ட தரப்பு அல்லது தரப்பினருடன் நேரடியாகவும் சாதுரியமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## செம்மையான நடைமுறைகள்

1. மேலே விவரித்த எல்லா நடவடிக்கைகளையும் தழுவிய முறையில் விரிவான தொடர்பாடல் பிரசாரத் திட்டமொன்றை வகுக்கவும்.
2. மேலே குறித்த கொள்கைகள், செம்மையான நடைமுறைகள் ஆகியவற்றை ஆதரித்து வெகுசன தொடர்பாடல் மற்றும் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.
3. மேலும் முழுமையான முறையிலே வெகுசன தொடர்பாடல் மற்றும் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். இது விடயத்தில் ஆயுதப் பிணக்குகளில் பாதிப்புற்ற பிள்ளைகளின் அவல நிலையையிட்டும் பொதுமக்கள் அதிக உணர்வும் அக்கறையும் கொள்ளச் செய்தல் அவசியம். அத்துடன் "பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்கள்"என்னும் கருத்துக்குப் பொது மக்களின் ஆதரவைப் பெருக்குதலும் வேண்டும்.
4. "பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்கள்" என்பது தொடர்பான கொள்கைகளை நிலைநாட்டுவதில் அல்லது செம்மையான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதில் குறிப்பிட்ட இடர்ப்பாடுகள் தோன்றும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் சாதுரியமான முறையில் நேரடியாகத் தொடர்பாடலையும் பிரசாரத்தையும் நடத்தவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாபனவாரியான அமைப்புகளும் நடைமுறைகளும்

*கொள்கைகள்*

- முடியுமான போதெல்லாம் ஏற்கனவே நிலை பெற்றிருக்கும் அரசாங்க, சமுதாய மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளையும் நடைமுறைகளையும் உபயோகிக்கவும் ஆதரிக்கவும் வேண்டும். ஏற்கனவே உள்ள ஏற்பாடுகள் போதாவெனத் திட்டவட்டமாகத் தெரிந்தால் மட்டுமே புதிய அல்லது சமாந்தரமான அமைப்புகளும் நடைமுறைகளும் பற்றிச் சிந்தித்தல் வேண்டும்.
- "பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்கள்" என்னும் கருத்தைப் பரப்புதற்கும் மற்றும் பிரசாரத்தின் முன்னேற்றத்தை அவதானித்தற்கும் பிரதிநிதிதுவப் பாங்கான சபையொன்று பொறுப்பேற்றல் வேண்டும்.
- அத்தகைய சபையானது, பிள்ளையின் உரிமைகள் பற்றிய பிரசாரம் கண்காணிப்பு ஆகியன தொடர்பான பூரண தேசிய கட்டமைப்பின் ஓர் அங்கமாயிருத்தல் வேண்டும்.

## உத்தேச நடவடிக்கைகள்

1. பிள்ளையின் உரிமைகள் பற்றிய சமவாயத்தினைப் பிரசித்தப்படுத்தவும் அது கடைப்பிடிக்கும் பாங்கினைக் கண்காணிக்கவும் சர்வவியாபகமான தேசிய அமைப்போ நடைமுறையோ இல்லாமையால் அத்தகைய அமைப்பினையும் அதனோடிணைந்த நடைமுறைகளையும் உருவாக்குதல்.

2. "பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்கள்" என்னும் கருத்தையும் அதையொட்டிய கொள்கைகள், செம்மையான நடைமுறைகள் ஆகியவற்றையும் பரப்புதற்கும் அம்முயற்சியின் பலாபலனை அவதானிப்பதற்கும் சர்வவியாபகமுள்ள தேசிய அமைப்பினை அல்லது நடைமுறையினை வகுத்து உருவாக்குதல்.

3. பிள்ளையின் உரிமைகள் பற்றிய சமவாயத்தைப் பொதுவாகவும் ஆயுதப் பிணக்கில் பாதிப்புற்ற பிள்ளைகளைக் குறிப்பாகவும் தழுவியதான தகவல் பரிவத்தனை அமைப்புகளை நிறுவுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 2

# பிள்ளைகள்: சமாதானத்தின் சரணாலயங்கள்
# வரன்முறையற்ற "சந்திப்புக் குழு"

இக் குழுவில் பங்குபெற்றோர் கீழ்க்காணும் அமைப்புகளினதும் முகவரங்களினதும் உறுப்பினர்களாவர் :

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
மனிதநேய முகவரகங்களின் பேரவை
செஞ்சிலுவையின் சர்வதேசச் செயற்குழு
இலங்கைத் தேசிய சர்வோதய சங்கம்
பிள்ளைகள் சாசனம் தொடர்பான தேசிய கண்காணிப்புச் செயற்குழு
ரெட் பார்ணா
சிறுவர் காப்பு நிதியம் (ஐ.ரா.)

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம்
ஐக்கி நாடுகள் அகதிகள் உயர் தானிகர்
ஐக்கிய நாடுகள் சனப்பெருக்க நிதியம்
ஐக்கிய நாடுகள் வதிவு இணைப்பாளர்
கொழும்புப் பல்கலைக் கழகம், சட்டப் பீடம்
உலக உணவுத் திட்டம்
உலக சுகாதார தாபனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள்: சமாதானத்தின் சரணாலயங்கள்

- ஆயுதப் பிணக்குகளின் கேடுகள் அல்லது தாக்கங்களிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு

- ஆயுதப் பிணக்குகளில் எந்தவகையிலும் தள்ளப்படாதிருக்கும் அல்லது பாவிக்கப் படாதிருக்கும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு.

- ஆயுதப் பிணக்கின் பாதகமான விளைவுகளிலிருந்து தப்பிக்க உதவி பெறும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு.

## ஆக்கப்பணிக்கு ஓர் அழைப்பு

- ஆயுதப் பிணக்கினால் அவதியுறும் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் எமக்குள்ள கடமைகளை தனித்தனியாகவும் ஒருமித்தும் நிறைவேற்றுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org